# ஆள் காட்டி விரலில் இருக்கிறது அதிகார மாற்றம்!

## ‘கணையாழி’ தலையங்கம்!

அமெரிக்கா, ஜெர்மனி கடந்து
ஐ.நா. சபை வரை
உலக நாடுகளின் கண்டனத்துக்கு
இந்திய ஜனநாயகத்தைக்
கொண்டு சேர்த்திருக்கிறார்
பிரதமர் நரேந்திர மோடி!

இந்திய ஜனநாயகத்தைக்
காப்பாற்ற அழைக்கிறார்
முதல்வர் மு.க.ஸ்டாலின்!

நடைபெற உள்ள தேர்தலில்
ஆட்சிக்கு யார் வருவது என்கிற
அதிகாரப் போட்டி இல்லை.

இந்தியாவில் ஜனநாயகம்
இருக்க வேண்டுமா?
வேண்டாமா? என்பதைத்
தீர்மானிக்கும் தேர்தல் என்று
போட்டியைக்
கூர்மைப் படுத்தியிருக்கிறார்
தமிழ்நாடு முதல்வர்!

தேர்தல் என்பது
ஜனநாயகத்தின் அடையாளம்!

தேர்தல் கால நடைமுறைகளில்
வெளிப்பட வேண்டும்
கட்சிகளின் ஜனநாயக மாண்புகள்!

எதிர்த்து நிற்கும் கட்சிகளை
மக்கள் மன்றத்தில்
அம்பலப்படுத்தும் அரசியலை
ஒவ்வொரு கட்சியும்
ஏற்கவும் வேண்டும்
எதிர்கொள்ளவும் வேண்டும்தான்.

ஆனால்
எதிர்த்து நிற்கும் கட்சித்
தலைவர்களைச்
சிறையில் அடைத்தும்
வங்கிக் கணக்குகளை
முடக்கிப் போட்டும்
வருமான வரி கட்டச் சொல்லியும்
தேர்தல் நேரத்தில்
பலமிழக்கச் செய்யும்
இழிவான தந்திரங்கள்
எடுபடக் கூடாது
ஜனநாயக நாட்டில்!

தேர்தல் அறிவித்தபின்
அமலாக்கத்துறை,
வருமான வரித்துறைகளுக்கு மட்டும்

அரசியல் நடவடிக்கைகளுக்கு
விதிவிலக்கு எப்படி?

அரசு நிகழ்ச்சிகளில்
அமைச்சர்கள் கலந்துகொள்ளக் கூடாது
ஆனால் வெளிநாட்டில்
பிரதமர் கலந்து கொள்கிறார்?

கட்சிக்கு நிதி திரட்டவும்
கட்சிகளை மிரட்டவும்
அரசுத்துறைகளின் சோதனை முறைகள்
எந்த நாட்டிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன?

தேர்தல் காலத்தில்
ஆட்சியில் இருக்கும்
எதிர்க்கட்சி முதலமைச்சரையே
சிறையில் அடைத்து முடக்கிப் போடுவது
எந்தவகை ஜனநாயகம்?

ஆளும் கட்சிக்காரர்கள்
குற்றச் சாட்டுக்கு
அப்பாற்பட்டவர்களாக இருப்பதும்
குற்றம் சாட்டப்பட்டவர்கள்
ஆளும் கட்சியில் சேர்ந்தவுடன்
உத்தமர்கள் ஆவதும்
எந்த நாட்டு ஜனநாயகம்?

தேர்தல் வந்திருக்கிறது
பத்திரமாக இருக்கவேண்டிய பட்டியலில்
புதிதாகச் சேர்ந்திருக்கிறது
ஜனநாயகமும்!

தேர்தல் பத்திரங்களைப் போலக்
கைப்பற்ற நினைக்கிறார்கள்
மக்களின் வாக்குகளை!
பண மதிப்பிழப்பைப் போல
வலுவிழக்கச் சதி செய்கிறார்கள்
வாக்குரிமையை!

ஒரே தேர்தல் என்று
ஒரேயடியாகத் தேர்தலையும்
வரும் காலத்தில்
முடக்கிப் போட நினைக்கலாம்!

இதுதான் கடைசித் தேர்தலாக இருக்க
நினைப்பவர்களுக்கு வாக்களிக்கப்
போகிறோமா?

வாக்களிக்க வேண்டியது
ஜனநாயகத்தைக்
காப்பாற்ற மட்டுமில்லை
வாக்குரிமையைக்
காப்பாற்றிக் கொள்ளவும் தான்!

நமது மூளையின்
கட்டுப்பாட்டைக் கையில் எடுக்க
ஆடியும் பாடியும்
காலில் விழுந்தும் கை தொழுதும்
வீதிகள் தோறும் பொய்களை விற்கும்
வித்தைக்காரர்கள்!



அன்புடன்
ம.ரா.

உள்ளே வெளியே பகடை ஆட்டத்தில்
களம் இறக்கியிருக்கிறார்கள்
கடவுள்களையும்!

நீதிமன்ற வெளிச்சத்தில்
அம்மணமாகி இருக்கின்றன
அமாவாசை இருட்டில் ஆடிவந்த
தேர்தல் பத்திர ஆட்டங்கள்!

வன்முறை தவிர்த்து
அதிகார மாற்றத்தைச்
சாத்தியப் படுத்துகிறது
வாக்குரிமை!

ஒருவருக்கு ஒரு வாக்கு என்று
எல்லோரும் சமமாவது
இப்போதும்
வாக்குச் சாவடியில் மட்டும்தான்!

வாக்களிப்பது
ஒரு வேட்பாளருக்கு என்றாலும்
அதில் இருக்கிறது இந்தியாவின்
எதிர்காலத்திற்கான பங்களிப்பும்!‘

புராண காலப் புதைகுழியிலிருந்து
இந்தியாவை மீட்டெடுத்து
நவீன இந்தியாவைக் கட்டமைக்கவும்
ஜனநாயகத்தைக் காக்கவும்
மக்களை
அழைக்கிறார் முதலமைச்சர்!

இந்தியாவின் எதிர்காலம்
நமது சுட்டு விரலில்!

ஜனநாயகம் மூச்சுவிட
மக்கள் விரோத அதிகாரத்தைச்
சுட்டிக் காட்டப் போகிறது
சுட்டு விரல்!

சுட்டு விரலுக்கு
ஆள் காட்டி விரல் என்றும் பெயர்!

இந்தியாவின் எதிர்காலத்தை
ஆளப் போகிறவரை
அடையாளம் காட்டப் போகிறது
ஆள் காட்டி விரல்!

ஆம்!
ஆள் காட்டி விரலில் இருக்கிறது
அதிகார மாற்றம்!

- நன்றி
**கணையாழி - ஏப்.1,2024**

---

எலக்ட்ரானிக்ஸ் ஏற்றுமதி 7.4 மில்லியன் அமெரிக்க டாலராக உயர்வு!

# ‘திராவிட மாடல்’ அரசில் தலைநிமிரும் தமிழ்நாடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளத்தில் பெருமிதம்!

**சென்னை, ஏப். 2 -**

**எலக்ட்ரானிக்ஸ் பொருள்கள் ஏற்றுமதி தமிழ்நாட்டில் 7.4 மில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்துள்ளதை ஒன்றிய அரசின் புள்ளி விவரங்கள் குறிப்பிட்டுள்ளதை சுட்டிக் காட்டி, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள ‘எக்ஸ்’ பதிவில் ‘திராவிட மாடல் ஆட்சியில் தலை நிமிரும் தமிழ்நாடு” என பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

2024 ஆம் நிதியாண்டில் மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் தமிழ்நாடு 30 சதவீதத்துடன் முன்னணி மின்னணுப் பொருட்களின் ஏற்றுமதியாளராகத் திகழ்கிறது.

இந்தியாவிலிருந்து மின்னணுப் பொருட்களை உலக நாடுகளுக்கு அதிகமான அளவில் ஏற்றுமதி செய்து அதன் மூலம் அதிக வருவாய் ஈட்ட ஒன்றிய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் விளைவாக ஒவ்வொரு ஆண்டும் இதன் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அந்த வகையில், இந்த ஆண்டும் மிகப் பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, மின்னணு பொருட்கள் ஏற்றுமதி கடந்த 2018 ஆம் ஆண்டு 0.1% இருந்த நிலையில், கடந்த 2019 ஆம் ஆண்டு 0.3%, 2020 ஆம் ஆண்டு 0.2%, 2021 ஆம் ஆண்டு 1.7%, 2022 ஆம் ஆண்டு1.9%,2023 ஆம்ஆண்டு 5.4% ஆக படிபடியாக உயர்ந்துள்ளதாக தெரிவித்துள்ளது.

இந்நிலையில், 2024 ஆம் நிதியாண்டில் மின்னணு பொருட்களை உலக நாடுகளுக்கு அதிகமான அளவில் ஏற்றுமதி செய்து 7.4% ஆக உயர்ந்துள்ளதாக ஒன்றிய அரசு அறிக்கையில் தகவல் தெரிவித்துள்ளது. மின்னணு அமைப்பு வடிவமைப்பு மற்றும் உற்பத்தி (ESDM) சரக்குகளின் மொத்த ஏற்றுமதியில் 2024 ஆம் நிதியாண்டில் 30% மின்னணு பொருட்கள் உற்பத்தியுடன் இந்தியாவின் முன்னணி மின்னணுப் பொருட்களின் ஏற்றுமதியாளராக தமிழ்நாடு தொடர்ந்து நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து பெருமிதம் பொங்க, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**“2021இல் 1.7 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்த தமிழ்நாட்டின் எலக்ட்ரானிக்ஸ் ஏற்றுமதி, நமது # Dravidian Model அரசில் இப்போது 7.4 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்திருக்கிறது.**

**கூடுதல் தகவல்... இது ஒன்றிய அரசின் புள்ளிவிவரம்!**

**எலக்ட்ரானிக்ஸ் மற்றும் செல்போன் ஏற்றுமதியில் முன்னணியில் நின்று, நாட்டின் ஏற்றுமதியில் 30% பங்கு வகிக்கும் நாம், நம் இலக்குகளை நோக்கி விரைந்து நடைபோடுவோம்! தலைநிமிரும் தமிழ்நாடு!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

10 ஆண்டுகளாக பிரதமராக இருப்பவர் என்ன செய்துகொண்டிருந்தார்!

# மோடியின் கச்சத்தீவு பேச்சு! தேர்தல் தோல்வியின் வெளிப்பாடு!

## விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

*சென்னை, ஏப்.2-*

*50 ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒன்றை, ஆட்சிக்கு வந்து 10 ஆண்டுகள் கழித்து கச்சத்தீவு குறித்து பேசுவது மோடி அவர்களின் தோல்வி பயத்தின் வெளிப்பாடாகும் என விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு:-*

*50 ஆண்டுகளுக்கும் முன் நடைபெற்ற கச்சத்தீவு பிரச்சினை குறித்து இப்போது ஏதோ புதிய கண்டுபிடிப்பு போல் மோடியும், அவர்கள் அமைச்சர்களும் பேசுவது தேர்தல் தோல்வி பயம் அவர்களை நெருக்குவதைக் காட்டுகிறது. 1974-ஆம் ஆண்டு அன்றைய மத்திய அரசால் ஒரு அரசியல் நோக்கத்திற்காக இலங்கைக்கு கச்சத்தீவு வழங்கப் பட்டுள்ளது. இது தமிழக மீனவர்களுக்கு பாதிப்பானது தான். அதற்காகத் தான் தொடர்ந்து தமிழ்நாட்டில் உள்ள ஆட்சி மற்றும் கட்சிகள் கச்சத்தீவு விவகாரத்தை நாடாளுமன்றத்தி லும் மக்கள் மன்றத்திலும் எழுப்பி வருகின்றனர்.*

*இந்த நிலையில் காங்கிரஸ் ஆட்சி நீங்கி, ஒன்றியத்தில் மோடி தலைமையிலான பாரதிய ஜனதா ஆட்சி வந்து 10 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இதுவரை கச்சத்தீவை குறித்து வாய் திறக்காத மோடியும், ஒன்றிய அரசும் இப்போது தமிழ்நாட்டில் டெபாசிட் வாங்க முடியாது என்பதை மக்கள் உணர்த்திய காரணத்தினால் 50 ஆண்டுகளுக்கு முன் நடந்த, அனைவரும் அறிந்த ஒன்றை ஏதோ புதிய கண்டுபிடிப்பு போல் அதனை பேசுவது, பிரதமரே பெரிதுபடுத்தி இதனை பேசுவது பாரதிய ஜனதா கட்சியினர் குறிப்பாக பிரதமர் மோடி விரக்தியின் விளிம்பில் உள்ளார் என்பதை வெளிப்படுத்துகிறது.*

*1974-ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியால் இலங்கைக்கு கச்சத்தீவு வழங்கப்பட்டது என்பது நாடறிந்த உண்மை. இதற்கான ஆவணங்கள் ஒன்றிய அரசிடம் உள்ளது. ஏதோ அரசியல் மேதை அண்ணாமலை இதனை புதிய கண்டுபிடிப்பு போல, தகவல் அறியும் சட்டத்தின் வழியாக கண்டுபிடித்து அதை வெளியிடுவதும் அதை வைத்துக் கொண்டு ஒரு பிரதமர், ஒரு வெளியுறவுத் துறை அமைச்சர் அதாவது அனைத்து ஆவணங்களையும் தங்கள் கையில் வைத்துக் கொண்டுள்ள இவர்கள், அண்ணாமலையின் கண்டுபிடிப்பைக் கொண்டு இப்போது கச்சத்தீவு குறித்து நீட்டி முழக்குகின்றனர்.*



*மீனவர்களுக்காக பிரதமர் மோடி நீலிக்கண்ணீர் வடிக்கிறார். இவர்கள் வாதப்படி காங்கிரஸ் கட்சி கச்சத்தீவை இலங்கைக்கு வழங்கிவிட்டது. இன்றைக்கு அவர்கள் ஆட்சியில் இல்லை. ஆட்சிக்கு வந்து பத்தாண்டு காலம் பதவியில் இருந்துள்ள மோடி, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் இந்த கச்சத்தீவை மீட்பதற்கு எடுத்த நடவடிக்கை என்ன? சொல்ல முடியுமா? நம்முடைய முதல்வர் குறிப்பி ட்டுள்ளதைப் போன்று பத்தாண்டு காலம் கும்பகர்ண உறக்கத்திலிருந்து விட்டு, தேர்தல் ஆதாயத்திற்காக இப்போது விழித்துக் கொண்டு கச்சத்தீவுப் பற்றி பேசுவது மிகுந்த கண்டனத்துக்குரியதாகும்.*

*பிரதமர் வேட்பாளராக மோடி அவர்கள் ஆர்.எஸ்.எஸ். மற்றும் பி.ஜே.பி.யால் அறிவிக்கப்பட்ட போது 2014-ஆம் ஆண்டு இதே தமிழ்நாட்டுக்கு வந்து மோடி தன்னுடைய நெஞ்சை விரித்து பொதுக்கூட்டத்தில் பேசினார். சுண்டைக்காய் நாடு இலங்கை கூட இந்தியாவைப் பார்த்து அஞ்ச மறுக்கிறது. இதற்குக் காரணம் கையால் ஆகாத காங்கிரஸ் கட்சியின் அரசு. என்னை பிரதமராக தேர்ந்தெடுத்தால் தமிழக மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காணப்படும் என்று அறிவித்தார். அறிவித்து பத்து ஆண்டுகள் கழிந்துள்ளன. இவர் தமிழ்நாட்டு மீனவர்களின் பாதுகாப்பிற்கு எடுத்த நடவடிக்கை என்ன? இன்று அறிக்கை வெளியிட்ட வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவர்கள் 20 ஆண்டு காலத்தில் இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட மீனவர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளார். அதில் பத்தாண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் கைது செய்யப் பட்டுள்ள தமிழக மீனவர்களுடைய பட்டியலையும், பறிமுதல் செய்யப்–பட்டுள்ள மீனவர்களின் படகுகள் குறித்தும் விவரத்தை வெளியிட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.*

*இப்படி எல்லாம் கூறுவதன் மூலம் தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றி, எப்படியாவது டெபாசிட்டை பெற்று விட வேண்டும் என்று மோடி ஆசைப்படுகிறார். அது ஒரு காலம் நடக்காது. மோடியை பொருத்தமட்டில் சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தம் இல்லாதவர் என்பது உலகறிந்த ஒன்றாகும். தமிழ்நாட்டு மக்களை எந்த காலத்திலும் மோடியால் ஏமாற்றி விட முடியாது. மிகத் தெளிவாக அவர்கள் முடிவெடுத்து விட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் அமைந்துள்ள அணி தமிழகம் மற்றும் புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் மகத்தான வெற்றி பெறும். உயர்ந்த பதவியில் இருக்கும் மோடி அவர்கள் இனி பொய் பேசுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.*

*இவ்வாறு பொன்குமார் தெரிவித்துள்ளார்.*

---

த.வேலு, நந்தனம் மதி, எஸ்.முரளி பங்கேற்பு

# 123அ வட்டத்தில் தமிழச்சி தங்கப்பாண்டியன் வாக்கு சேகரிப்பு

## வட்டச் செயலாளர் மூ.இராஜேந்திரன் வேண்டுகோள்

*சென்னை, ஏப்.2 -*

*123அ வட்டச் செயலாளர் மூ.இராஜேந்திரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-*

*மயிலாப்பூர் மேற்கு பகுதி 123அ வட்டத்தில் இன்று (02-04-2024 செவ்வாய் கிழமை) மாலை 4.00 மணியளவில் நாகேஸ்வரராவ் பார்க், ஆவின் பாலகம் அருகில் துவங்கி 123அ வட்டத்திற்குட்பட்ட பல்லக்கு மாநகர்,கபாலி தோட்டம், கெனால் பேங்க் ரோடு, விசாலாட்சி தோட்டம், விசாலாட்சி நகர், சுப்புராயன் நகர், குருபுரம், கன்னிக் கோவில் மேடு மற்றும் பள்ளம். பகுதிகளில் நாடாளுமன்ற வேட்பாளர் முனைவர் சுமதி (1) தமிழச்சிதங்கப்பாண்டியன் வாக்கு சேகரிக்கின்றார். அவருடன் தொகுதிப் பொறுப்பாளரும் சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி, மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ். முரளி முன்னிலை வகிக்கிறார்கள்.*

*வட்டக் கழக செயலாளர்கள் எஸ்.ஆர்.ராஜ சுரேஷ் குமார், நாகராஜ், கிருஷ்ண மூர்த்தி, ராஜவேலு, அ.தாஸ், மா.ப.அன்பு, வி.வேற்றிவேல், தவநேசன், கோ. கண்ணன், பொன்னுசாமி, துரைபார்த்திபன். மற்றும் மாவட்டக்கழக நிர்வாகிகள், மயிலை மேற்கு பகுதி 123அ வட்ட ஒருங்கிணைப்பாளர்கள் இரா. சக்ரவர்த்தி, ஜி.முருகன், சீ. வி.திவாங்குமார், பகுதிக்கழக நிர்வாகிகள் ஜி.ஆர். ராஜேந்திரன், அகல்யாவிஸ்வநாதன், பாக்கியதாஸ், ஆர்.எல்.வி. அ சோக் கு மார் கூட்டணிக்கட்சி தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, இலக்கிய அணி, வர்த்தக அணி, சுற்றுசூழல் அணி, வழக்கறிஞர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, அமைப்பு சாரா ஒட்டுணர் அணி, சிறுப்பாண்மை யர் அணி, தொழிலாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, மற்றும் வட்டக்கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாகமுகவர்கள், பாக உறுப்பினர்கள் கழக முன்னோடிகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென்று வட்டச் செயலாளர் மூ.இராஜேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.*

---

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, தேர்தல் பிரச்சாரம்!

(திருத்தப்பட்டது)




## தலைமைக் கழகம் அறிவிப்பு

2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, அவர்கள் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 02.04.2024 (செவ்வாய்க்கிழமை) | திருநெல்வேலி<br>தென்காசி |
| 04.04.2024(வியாழக் கிழமை) | மதுரை<br>தேனி |
| 08.04.2024 (திங்கட் கிழமை) | சென்னை தெற்கு |

**“அண்ணா அறிவாலயம்”**
*சென்னை-18.*
*29.03.2024*

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



இந்தியா கூட்டணியின் திருவள்ளூர் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர். சசிகாந்த் செந்திலை ஆதரித்து திருவள்ளூர் மத்திய மாவட்டம், ஆவடி மாநகரம், ஆவடி தெற்கு பகுதி, 35 ஆவது வார்டு ,மீன் மார்க்கெட் ரயில்வே நிலையம் பகுதியில் முன்னாள் பால்வளத்துறை அமைச்சர், திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ பிரச்சாரம் மேற்கொண்டு வாக்குகள் சேகரித்தார். உடன் இ.ந்.தி.யா கூட்டணி கட்சி நிர்வாகிகள், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க வின் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகரக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்டச் செயலாளர்கள் கவுன்சிலர்கள் உள்ளனர்.